சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி
அசல் வழக்கு எண். 127/2023

08.08.2024

**வா.சா.1 வீரையன் த/பெ. விஸ்வநாதகண்டியர் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

வழக்கறிஞர் அறிவிப்பு, வழக்குரை, எதிர்வழக்குரை நிரூபண பிரமாண பத்திரம் ஆகியவற்றில் உள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எத்தனை அயிட்ட சொத்துக்களாக காட்டியுள்ளேன் என்றால் அதன் சர்வே எண் என்ன, விஸ்தீரணம் என்ன, நான்கு பக்க எல்லைகள் என்ன என்பது 92/பி1 ஏக்கர், 89/2ஏ 77 சென்ட், சர்வே எண். 92/பிக்கு நான்கெல்லை கண்ணன் வகையறா நிலத்திற்கு மேற்கு, கணபதி செட்டியார் நிலத்திற்கு வடக்கு, சத்திரம் கோவில் நிலத்திற்கு தெற்கு, முருகையா கண்ணிக்கு கிழக்கு, சர்வே எண். 89/2ஏ நான்கெல்லை மேற்சொன்ன அதே நான்கெல்லை ஆகும். தற்போது நான் சொன்னது 1, 2 அயிட்ட சொத்துக்களுக்கு உள்ளதாகும். வழக்கில் சொல்லியுள்ள வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியும். கதவு எண். 1/33 ஆகும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பு நான் அனுப்பிய அறிவிப்பு தான். அந்த அறிவிப்பில் 1வது அயிட்ட சொத்திற்கு சர்வே எண், கதவு எண், நான்கெல்லை எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். 1வது அயிட்ட சொத்தை பொறுத்தவரை 30 குழி தோராயமாக சொல்லியுள்ளேன் என்றால் 30 குழி என்பது தான் சரி. வழக்குரையில் காட்டப்பட்டுள்ள சொத்துவிவரத்தில் எத்தனை ஏர்ஸ் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 0.01.20 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் மொத்த விஸ்தீரணம் என்றால் அதுபற்றிய கால்குலேசன் எனக்கு தெரியாது. நான் எப்போது ஊரை விட்டு வெளியேறினேன் என்றால் 1980ல் ஊரை விட்டு வெளியேறினேன். நான் ஒவ்வொரு மாதமும் என் குடும்பத்தை சந்தித்து பெற்றோரை பார்த்துவிட்டு செல்வேன். எந்த ஊரில் இருந்தேன் என்றால் கோயமுத்தூரில் இருந்தேன். என்னுடைய ஆதார் கார்டு, குடும்ப அட்டை எந்த முகவரியில் உள்ளது என்றால் சென்னை முகவரியில் உள்ளது. என் சகோதரிக்கு 1999ல் திருமணம் ஆனது. அவர் மன்னார்குடி, காந்திநகரில் வசித்து வருகிறார். எனது பாட்டனார் பெயரில் சொத்து எங்கு உள்ளது என்றால் சொத்து இருந்தது. அந்த சொத்தை விற்றுதான் 1 ஏக்கர் 77 சென்ட் வாங்கப்பட்டது. எனது தாத்தா பெயர் கதிரேசகண்டியர். அவருடைய சொத்து பற்றிய சர்வே எண் பற்றி எனக்கு தெரியாது. எனது தாத்தா எப்போது இறந்தார் என்றால் எனக்கு 12 வயது இருக்கும்போது இறந்தார். தாத்தா சொத்தை விற்றுதான் வழக்குரையில் கண்ட சொத்தை வாங்கினோம் என்ற விவரத்தை என்னுடைய வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு எந்த விவரத்தையும் வழக்குரையில் சொல்ல வில்லை என்றாலும், தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறனே் என்று சொன்னால் சரியல்ல. மன்னார்குடியில் எனது மனைவி பெயரில்

வீடு உள்ளது. அதன் கதவு எண் என்றால் 1188 ஆகும். எனது பெயரில் உள்ள சொத்து விளக்குடியில் உள்ளது. சர்வே எண் நினைவில்லை. எனது மகன் பெயரில் மன்னார்குடி, செம்மொழி நகரில் உள்ளது. அதன் சர்வே எண் நினைவில்லை. அது என் மகன் வாங்கியதால் எனக்கு தெரியாது. என் அப்பா வாங்கிய சொத்திற்கான கிரய பத்திரம் வா.சா.ஆ.1 ஆவணமானது எனது அப்பாவின் தனிப்பட்ட சொத்து என்றால் சரிதான். 2 வது அயிட்ட சொத்திற்கு தற்போது புதிதாக சர்வே எண் கொடுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் அப்பா பிரதிவாதியின் மகன் பெயருக்கு ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிர்வழக்குரையை படித்து பார்த்து அதில் சொல்லியுள்ள உயிலை படித்துப்பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அந்த உயில் ஆவணத்தில் என்னுடைய காலத்திற்கு பிறகு உயிலில் கண்ட சொத்தை பிரதிவாதியின் மகன் வீரமுத்து சர்வசுதந்திர பாத்தியம் அடைந்து பட்டா பெயர் மாற்றி அனுபவித்துக்கொள்ளவேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் அந்த உயிலில் தனது பேரனை தவிர வேறு யாருக்கும் உரிமை கிடையாது என்று எழுதி வைத்துள்ளதும் எனக்கு தெரியும். அந்த உயில் ஆவணம் என் அப்பா இறந்தபிறகு வீரமுத்துவின் சட்டபூர்வமான அனுபவத்திற்கு வந்து தற்போது வீரமுத்துதான் அனுபவித்து வருகிறார் என்றால் அவர் தான் அனுபவித்து வருகிறார். எங்களுக்கு தர மறுக்கிறார். என் அப்பா பெயரில் கிரயம் வாங்கிய வா.சா.ஆ.1 பதிவு செய்யப்பட்ட அதே நாளிலேயே என் பெயரிலும் பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். என் பெயரில் உள்ள அந்த ஆவண எண். 181/2004 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அப்பா பெயரில் பதிவு செய்யப்பட்ட பத்திர எண். 180/2004 என்றால் சரிதான். என் பெயரில் உள்ள மேற்சொன்ன கிரய பத்திரத்தின் சர்வே எண் என்ன என்பது தற்போது நினைவில்லை. என் பெயரில் உள்ள சொத்திற்கும் என் அப்பா வாங்கிய சொத்திற்கும் என் அப்பா பெயரில் தான் கிரய ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் பெயரில் வாங்கிய கிரய பத்திரத்திற்கு முன்பு என் பெயரிலேயே கிரய ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. என் பெயரில் போடப்பட்ட கிரய ஒப்பந்தத்தில் சுப்பிரமணியன், கோவிந்தராஜ் பிள்ளை ஆகியோர்கள் சாட்சி கையெழுத்து போட்டார்கள். அவர்கள் தற்போது இறந்துவிட்டார்கள். எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் போடப்பட்டது என்பது ஞாபகமில்லை. எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் வாங்கினேன் என்றால் நினைவில்லை. என் பெயரில் எந்த கிரய ஒப்பந்தம் போடப்படவில்லை என்றாலும், என் அப்பா பெயரில் தான் கிரய ஒப்பந்தம் போடப்பட்டது என்றும், அதற்கான தொகையை என் அப்பா தான் கொடுத்தார் என்றாலும் சரியல்ல. என் பெயரில் வாங்கப்பட்ட கிரய பத்திர தொகையையும், இந்த பிரதிவாதி மற்றும் என் தகப்பனார் ஆகியோர்கள் கொடுத்த தொகை என்றால் சரியல்ல. என் மனைவி மற்றும் நான் அவளது நகையை விற்பனை செய்து கிடைத்த பணத்தை கொண்டு என் பெயரில் சொத்தை வாங்கினேன். எனக்கு 1991ல் திருமணம் நடந்தது. நான் தனியார் நிறுவனத்தில் ஆக்ஸிஜன் பிளாண்ட் இன்சார்ஜ் ஆக

பணிபுரிந்தேன். என் பெயரில் உள்ள கிரய பத்திரத்திற்கு நான் எந்த காலத்திலும் தொகை கொடுக்கவில்லை என்றாலும், அந்த நேரத்தில் தொகை கொடுக்ககூடிய அளவிற்கு எனக்கு தகுதி இல்லை என்றாலும் சரியல்ல. கிரய ஒப்பந்த தொகையை என் தகப்பனார் கொடுத்ததாலும், கிரய தொகையை பிரதிவாதியின் தகப்பனாரும் கொடுத்த காரணத்தால் தான் நான் தற்போது அதைப்பற்றி எனக்கு ஞாபகமில்லை என்று பொய்யாக சொல்லி தப்பிக்க பார்க்கிறேன் என்றால் சரியல்ல. எனது பெயரில் உள்ள சொத்தும், 2 அயிட்ட சொத்தும் என் தகப்பனாரும், பிரதிவாதியும் சுய சம்பாத்திய பணத்திலிருந்து கிரயம் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனது பெயரில் உள்ள சொத்தும் பூர்வீக சொத்திலிருந்து கிடைத்த வருமானத்தை கொண்டு வாங்கப்பட்டது என்றாலும், அந்த சொத்தை வழக்கில் சேர்க்காததால் என்னுடைய வழக்கு குறைபாடு உடைய வழக்கு என்றால் சரியல்ல. பூர்வீக சொத்தில் உள்ள வருமானம், கூட்டுறவு சங்கத்தில் பெற்ற கடன், தனிப்பட்ட முறையில் வாதி பத்திரம் மூலம் பூர்வீக சொத்தினை விற்று அதில் கிடைத்த பணத்தை கொண்டு என் பெயரிலும், என் மனைவி பெயரிலும், என் மகன் பெயரிலும் சொத்து பெறப்பட்டது என்று சொன்னாலும் அந்த சொத்துக்களையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யாததால் என் வழக்கு குறைபாடுடைய வழக்கு என்றால் சரியல்ல. என் சகோதரிக்கு பிரதிவாதி தான் திருமணம் செய்து வைத்தார் என்றும், நான் வெளியூரிலேயே வசித்து வந்து குடும்பத்தை கவனிக்கவில்லை என்றால் சரியல்ல. என் குடும்பத்தில் பெற்றோரை கவனிக்கவில்லை என்றாலும், என் தகப்பனாரின் ஈமைச்சடங்கை கூட பிரதிவாதி தான் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. 1ம் அயிட்ட சொத்து பிரதிவாதி பெயரில் அரசால் பட்டா வழங்கப்பட்டு அவர் அனுபவத்திலும் உள்ளது என்றால் சரியல்ல. தற்போது பிரதிவாதிதான் இருக்கிறார். 1வது அயிட்ட சொத்தான வீடு மோடி திட்டத்தின் கீழ் பிரதிவாதி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் என் அப்பா தான் வீடு கட்டினார். தற்போது பிரதிவாதி அவர் மனைவி பெயரில் மாற்றிவிட்டார். பழைய வீட்டை தான் மோடி திட்டத்தின் கீழ் கொஞ்சம் விரிவுபடுத்தியுள்ளார். பழைய வீடு கூரை வீடு என்றால் சரிதான். தற்போது பழைய வீடு மாட்டுக்கொட்டகையாக இருக்கிறது. பழைய வீடு எந்த சர்வே எண்ணில் உள்ளது, புதிய வீடு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் எல்லாம் ஒரே சர்வே எண்ணில் தான் உள்ளது. வீட்டின் மதிப்பை எதன் அடிப்படையில் கணித்து வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் அதில் செலவு செய்த தொகைகளை வைத்து சொல்லியுள்ளேன். அந்த வீட்டிற்கு வீட்டுவரி ரசீது அப்பா பெயரில் உள்ளது. நான் எத்தனை ரசீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஒரு ரசீதை தாக்கல் செய்துள்ளேன். நான் பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றாலும் வீட்டுரசீது மோடி திட்டத்தின் கீழ் வீடு கட்டியது போன்ற ஆவணங்களை எல்லாம் பிரதிவாதி பெயரில்தான் உள்ளது என்றாலும், இந்த வழக்கு தாக்கல் செய்வதற்காக வீட்டுவரி ரசீதை என் அப்பா பெயரில் உற்பத்தி செய்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த காரணத்தினால் தான் வழக்கில் உள்ள சொத்து விவரத்தைப்பற்றி வீடு கட்டிய

முறை ஆகிய எதுவும் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள விஸ்தீரணம், நான்கெல்லைகள் எல்லாம் தவறு என்றால் சரியல்ல.

**(பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)**

Sd:/வீரையன்

Sd:/– திரு.எஸ்.முத்துராமன்.,பி.எல்.,
சார்பு நீதிபதி (மு.கூ.பொ)
திருத்துறைப்பூண்டி.